முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்

முன்னிலை:– திரு R. சுந்தரையா, பி.எஸ்.சி.,பி.எல்.,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனி மாதம் 22 ம் தேதி)

**I.A.No.3/2024 in I.A.No.2/2023 in O.S.No.150/2019**

**CNR No. TNNM01-001434-2019**

| | |
|---|---|
| கிருஷ்ணமூர்த்தி | ........மனுதாரர் /எதிர்மனுதாரர்/பிரதிவாதி |
| /எதிராக/ | |
| சந்திரசேகர் | ..........எதிர்மனுதாரர் /மனுதாரர்/வாதி |

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 28.3.2024 ம் தேதி கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முத்துசாமி அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கே.மணி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

1) உரியகாலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்படும் மனுவில் கண்டுள்ள ஆவணங்களை, காலதாமதத்தினை மன்னித்து ஏற்றுக்கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்திரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரிவு 8 விதி 1A(3) மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன் கீழான மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு–**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/வாதி A

அட்டவணை சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், B அட்டவணை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், பாகப்பிரிவினை பரிகாரமும் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருவதாகவும், இம்மனு A அட்டவணை சொத்தை அனுபவம் செய்து வருவது குறித்து கணக்குகளை நீதிமன்றத்தில் பணமாகவோ அல்லது வேறு வகையிலோ வைப்பீடு செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருந்ததாகவும், வாதியின் சகோதரர் ராஜசேகர்(எ) ராஜ்முத்தையா அமெரிக்காவில் நிரந்தரமாக வசித்து வருவதாகவும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து அவருடைய சகோதரியான பத்மலோசனா என்பவருக்கு 12.12.1995 ம் தேதியன்று பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதன் பின்னர் 12.12.1996 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செய்துக்கொண்டதாகவும், 5.2.1998 ம் தேதியன்று அவ்வாறு கிடைத்த சொத்துக்களை மனுதாரர் வசம் குத்தகைக்கு விட்டு குத்தகை பத்திரமும் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், தாவா A அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து ரூ.4,00,000/–க்கு கிரைய தொகை நிர்ணயம் செய்து 11.9.2006 ம் தேதியன்று கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு அதற்குரிய ரசீதை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் இந்நிலையில் பத்மலோசனா என்பவர் 2007 ல் இறந்துவிட்டார் என்றும், அவருடைய கணவர் மனுதாரரை தாவா A அட்டவணை சொத்துக்களிலிருந்து வெளியேற்ற முற்பட்டதால் நாமக்கல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.260/2008 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தாவா A அட்டவணை சொத்தானது வாதியின் சுவாதீனத்தில் இருந்து வந்து மனுதாரர் தீர்வத்தொகை செலுத்தி வருவதாகவும் அதனால் மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்பதால் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்திரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் /வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு–</u>

மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும்,

எதிர்உரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மனுவில் கூறியுள்ள சங்கதிகளை முற்றிலும் மறுத்தும், 5.2.1998ம் தேதியன்று தாவா A அட்டவணை சொத்தைப் பொறுத்து மனுதாரருக்கு குத்தகை ராஜசேகர் என்கிற ராஜமுத்தையாவின் பொது அதிகார ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறியுள்ளதை மறுத்தும், அதன் பின்னர் மேற்படி மனுதாரரும் ராஜசேகர் என்கிற ராஜமுத்தையா என்பவரும் கிரைய ஒப்பந்தம் செய்துக்கொண்டதாக கூறியுள்ளதை முற்றிலும் மறுத்தும், மேற்படி இரண்டு ஆவணங்களும் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்றும் ஆகவே வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிர்உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **<u>மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.</u>**

5) இருதரப்பு வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.

6) மனுதாரர் தரப்பில் மனு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதுகுறித்து இம்மனுவில் தீர்மானம் செய்ய முடியாது. அசல் வழக்கில் சாட்சியங்களின் விசாரணையின்போதுதான் ஆவணங்களின் செல்லும் தன்மை பொறுத்து தீர்மானம் செய்ய இயலும். எனவே ஆவணங்களின் ஏற்கும் தன்மை, மெய்ப்பிக்கும் தன்மை மற்றும் தொடர்புடமைக்குட்பட்டு ஆவணங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7) மனு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் ஏற்கும் தன்மை, தொடர்புடமை, மெய்ப்பிக்கும் தன்மைக்குட்பட்டு மனுவானது அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 – ஆம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

R SUNDARIAH

Digitally signed by R SUNDARIAH
Date: 2024.04.04 17:41:22 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.